## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் தேதி மனுதாரர் தரப்பு சாட்சி மா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நி.வே.இ.ம.எண். 2/2023 இல் நி.வே.இ.ம.எண். 1/2022 இல் நி.வே.ம.எண்.293/2006

மா.சா.1 எஸ்.பி.தாமோதரன்

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனத்தில் முதலில் நான் Managing Director ஆக இருந்தேன் என்றால் சரிதான். நான், எனது தாயார் மற்ற இரு சகோதரர்கள் ஆகியோர்கள் பங்குதாரர்களாக இருந்தோம் என்றால் சரிதான். அதன்பிறகு என் சகோதரர் மகேந்திரன் மற்றும் தாயார் திருப்பாத்தாள் நிறுவனத்திலிருந்து விலகிவிட்டார்கள் என்றால் சரிதான். எனக்கு 50 சதவீதம், சிவானந்தத்திற்கு 50 சதவீதம் நிறுவனத்தில் ஒதுக்கப்பட்டது.

2. கடன்தொகையானது மகேந்திரன் விலங்கப்பட்ட பிறகு வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தொகைகளுக்கு எல்லாம் திருப்பி செலுத்தவேண்டுமென்று கடன் கொடுத்தவர்கள் எல்லாம் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். நானும், எனது சகோதரர் சிவானந்தமும் தனித்தனியாக பாகப்பிரிவினை செய்துகொண்டு அவர் 100 சதவீதம் பங்குகளை சிவானந்தம் கொடுத்துவிட்டார். மற்ற சொத்துக்களை நான் சிவானந்தத்திற்கு கொடுத்துவிட்டேன்.

3. ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் எனக்கு 100 சதவீதம் பாத்தியம் என்றால் சரிதான். சிவானந்தத்திற்கு எந்த ஒரு பங்கோ உரிமையோ கிடையாது என்றால் சரிதான். 04.10.1994ல் இருந்து எனக்கும், சிவானந்தத்திற்கும் நிரந்தர பாகப்பிரிவினை ஏற்பட்டு விட்டது என்றால் சரிதான். அதன்பிறகு வழக்குகள் எல்லாம் ஒருதலைபட்சமாக எனக்கு எதிராக தீர்ப்பானது என்றால் சரிதான். அனைத்து வழக்குகளிலும் ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டது என்றால் சரிதான்.

4. அந்த ஒருதலைப்பட்ச தீர்ப்பு நிறுவனத்தின் மீதும், என் மீதும் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் சிவானந்தம், சிவகாமி பெயரிலும் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகியிருந்தது என்றால் சரிதான். தீர்ப்புத்தொகையை செலுத்தவில்லை என்றால் Civil Arrest தீர்ப்பாகி அந்த உத்தரவின்பேரில் சிவானந்தம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த சீராய்வு மனுவில் என்னையும் ஒருதரப்பினராக சேர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.

5. அந்த சீராய்வு மனுவை நான் நடத்தவில்லை என்றால் சரிதான். சிவானந்தம் மட்டும் தான் நடத்தினார். அந்த சீராய்வு மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமானது ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிட் நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மீதும், அதற்கு போதிய பணமில்லை என்றால் என் பெயரிலும், சிவானந்தம் பெயரிலும் நடவடிக்கை எடுக்கலாம் என்று உத்தரவிடப்பட்டு அதன்படி நிறைவேற்று மனுவை திருத்திக்கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6. அதன்படி தான் முதல் எதிர்மனுதாரர் மனுவை திருத்தவேண்டுமென்று மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தான் இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**